அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி

ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண் :150/2016
தேதி. :24/09/2016

## தமிழ் பத்திரிக்கை உலகின் முடிசூடா மன்னர் பத்மஸ்ரீ டாக்டர் பா.சிவந்தி ஆதித்தன் அவர்களின் 81 வது பிறந்தநாள் விழா ச.ம.க நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் அறிக்கை

தமிழ் பத்திரிக்கை உலகின் முடிசூடா மன்னராகவும், கல்வி, விளையாட்டு, தொழில் போன்ற பல துறைகளில் இமாலய இடத்தை பிடித்த பத்மஸ்ரீ டாக்டர் பா.சிவந்தி ஆதித்தன் அவர்களின் 81 வது பிறந்தநாளை கொண்டாடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1936 ஆம் ஆண்டு செப்டம்பர் 24 ஆம் தேதி பிறந்த இவர் இளம் வயதி தேசிய மாணவர் படையில் சிறந்து விளங்கி அனைத்து கல்லூரிகளின் தேசிய மாணவர் படையின் தலைவராக உயர்ந்தவர். மாநில கல்லூரியில் படித்து பட்டம் பெற்றார்.

1942 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட "தினத்தந்தி " பத்திரிக்கையின் நிர்வாக பொறுப்பை ஏற்று பத்திரிகை உலகத்தில் பெரிய மாற்றத்தையும், முன்னேற்றத்தையும் கொண்டுவந்தவர் என்றால் அது மிகையாகாது. தொழிலாளர்களோடு தொழிலாளியாக இணைந்து பணியாற்றியவர்.

விளையாட்டுத் துறையில் உலக அரங்கில் இந்தியாவை உயர்த்திய பெருமைக்கு சொந்தக்காரர். பல பதக்கங்களை வென்ற இவர் 2000 ஆண்டில் இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் வாழ்நாள் தலைவராக இருந்தார். இலக்கியம் மற்றும் கல்வித்துறையில் சிறந்த சேவை புரிந்ததற்காக 2008 ஆம் ஆண்டு மத்திய அரசு பத்மஸ்ரீ விருது வழங்கி கவுரவித்தது.

இத்தனை பெருமைகளை சாதித்த திரு சிவந்தி ஆதித்தன் அவர்களின் பிறந்த நாளான இன்று அவர்தம் நற்பண்புகளை நினைவு கூர்ந்து, நாமும் அவற்றை வாழ்நாளில் கடைப்பிடித்து வாழ்வோம் என்ற உறுதிமொழி எடுப்போம் என்று சமத்துவ மக்கள் கட்சி சார்பில் தெரிவித்து கொள்கிறேன்.

நன்றி வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

**ஆர்.சரத்குமார்** B.Sc.
நிறுவனத் தலைவர்